# டிசம்பர்–09–திருவருகைக்காலஇரண்டாம் ஞாயிறு

**"பள்ளத்தாக்குகள் எல்லாம் நிரப்பப்படும். மலை, குன்றுயாவும் தாழ்த்தப்படும்" – லூக் 3:5**

---

## முதல் வாசகம் பாருக் 5 : 1 – 9

எருசலேமே, உன் துன்ப துயரத்தின் ஆடைகளைக் களைந்துவிடு கடவுள் உனக்கு அருளும் மாட்சியின் பேரழகை என்றென்றும் ஆடையாக அணிந்துகொள். கடவுளிடமிருந்து வரும் நீதியை ஆடையாய்ப் புனைந்து கொள் என்றுமுள்ளவரின் மாட்சியை மணிமுடியாக உன் தலைமீது சூடிக்கொள். கடவுள் வானத்தின்கீழ் உள்ள எல்லா நாடுகளுக்கும் உன் பேரொளியைக் காட்டுவார். "நீதியில் ஊன்றிய அமைதி ", "இறைப்பற்றில் ஒளிரும் மாட்சி" என்னும் பெயர்களால் கடவுள் உன்னை என்றென்றும் அழைப்பார். எருசலேமே, எழுந்திரு் உயர்ந்த இடத்தில் எழுந்து நில். கீழ்த்திசையை நோக்கு் கீழ்த்திசைமுதல் மேற்றிசை வரை உள்ள எல்லா நாடுகளிலிருந்தும் உன் மக்கள் தூயவரின் சொல்லால் ஒன்று சேர்க்கப்பட்டு, கடவுள் தங்களை நினைவு கூர்ந்ததற்காக மகிழ்வதைப் பார். பகைவர்கள் கடத்திச் சென்ற உன் மக்கள் உன்னைவிட்டுப் பிரிந்து சென்ற பொழுது நடந்து சென்றார்கள் ஆனால் கடவுள் அவர்களை உன்னிடம் திரும்ப அழைத்துவரும் பொழுது அரியணையில் வீற்றிருக்கும் மன்னர்போல் உயர்மிகு மாட்சியுடன் அழைத்துவரப்படுவார்கள். கடவுளின் மாட்சியில் இஸ்ரயேல் பாதுகாப்புடன் நடந்துவரும் பொருட்டு, உயர் மலைகள் என்றென்றும் உள்ள குன்றுகள் எல்லாம் தாழவும் பள்ளத்தாக்குகள் நிரம்பவும் இவ்வாறு நிலம் முழுதும் சமமாகவும் கடவுள் கட்டளையிட்டுள்ளார். மேலும், காடுகளும் நறுமணம் வீசும் மரங்கள் அனைத்தும் கடவுளின் கட்டளையால் இஸ்ரயேலுக்கு நிழல் கொடுத்தன. கடவுள் தம் மாட்சியின் ஒளியில் மகிழ்ச்சியோடும், தம்மிடமிருந்து வெளிப்படும் இரக்கத்தோடும் நீதியோடும் இஸ்ரயேலை அழைத்து வருவார்.

**பதில்பாடல் :** ஆண்டவர் நமக்கு மாபெரும் செயல்கள் புரிந்துள்ளார்.

## இரண்டாம் வாசகம் : பிலிப்பியர் 1 : 4 – 6, 8 – 11

சகோதர, சகோதரிகளே உங்கள் அனைவருக்காகவும் எப்பொழுதும் மகிழ்ச்சியோடு மன்றாடிவருகிறேன். ஏனெனில் தொடக்கமுதல் இன்றுவரை நீங்கள் நற்செய்திப் பணியில் என்னோடு பங்கேற்று வருகிறீர்கள். உங்களுள் இத்தகைய நற்செயலைத் தொடங்கியவர், கிறிஸ்து இயேசுவின் நாள் வரை அதை நிறைவுறச்செய்வார் என உறுதியாய் நம்புகிறேன். கிறிஸ்து இயேசு கொண்டிருந்த அதே பரிவுள்ளத்தோடு உங்கள்மீது எத்துணை ஏக்கமாயிருக்கிறேன் என்பதற்குக் கடவுளே சாட்சி. மேலும், நீங்கள் அறிவிலும் அனைத்தையும் உய்த்துணரும் பண்பிலும் மேன்மேலும் வளர்ந்து, அன்பால் நிறைந்து, சிறந்த வற்றையே ஏற்றுச் செயல்படுமாறு இறைவனை வேண்டுகிறேன். கடவுளின் மாட்சிக்காகவும் புகழ்ச்சிக்காகவும் இயேசு கிறிஸ்துவின் வழியாய் நீதியின் செயல்களால் நிரப்பப்பெற்று கிறிஸ்துவின் நாளுக்கென்று குற்றமற்றவர்களாக நேர்மையோடு வாழ்ந்துவர வேண்டுமென்றே இவ்வாறு செய்கிறேன்.

## நற்செய்தி : லூக்கா 3 : 1 – 6

அக்காலத்தில், திபேரியு சீசர் ஆட்சி செய்துவந்த பதினைந்தாம் ஆண்டில், பொந்தியு பிலாத்து யூதேயாவின் ஆளுநராக இருந்தார். ஏரோது கலிலேயப் பகுதிக்கும் அவன் சகோதரராகிய பிலிப்பு, இத்துரேயா, திரக்கோனித்துப் பகுதிகளுக்கும் லிசானியா அபிலேன் பகுதிக்கும் குறுநில மன்னர்களாக இருந்தனர். அன்னாவும் கயபாவும் தலைமைக் குருக்களாய் இருந்தனர். அக்காலத்தில் செக்கரியாவின் மகன் யோவான் பாலைநிலத்தில் வாழ்ந்து வந்தார். அவர் கடவுளின் வாக்கைப் பெற்றார். "பாவமன்னிப்பு அடைய மனம்மாறித் திருமுழுக்குப் பெறுங்கள்" என்று யோர்தான் ஆற்றை அடுத்துள்ள பகுதிகள் அனைத்துக்கும் சென்று அவர் பறைசாற்றிவந்தார். இதைப்பற்றி இறைவாக்கினர் எசாயாவின் உரைகள் அடங்கிய நூலில் இவ்வாறு எழுதப்பட்டுள்ளது "பாலைநிலத்தில் குரல் ஒன்று முழங்குகிறது "ஆண்டவருக்காக வழியை ஆயத்தமாக்குங்கள் அவருக்காக பாதையைச் செம்மையாக்குங்கள் பள்ளத்தாக்குகள் எல்லாம் நிரப்பப்படும் மலை, குன்றுயாவும் தாழ்த்தப்படும் கோணலானவை நேராக்கப்படும் கரடு முரடானவை சமதளமாக்கப்படும். மனிதர் அனைவரும் கடவுள் அருளும் மீட்பைக் காண்பர்".

**தியானம்:** 2018ம் ஆண்டின் திருவருகைக் காலத்தின் இரண்டாம் ஞாயிறில் நற்செய்தியாளர் லூக்கா "இறையாட்சி நெருங்கி வந்துவிட்டது" (லூக்கா21:25-28) என அறிவிக்கின்றார். ஏனெனில் 2018ம் ஆண்டின் திருவருகைக் காலத்தின் மற்றைய மூன்று ஞாயிறு நற்செய்திகளும் பாவிகளான எமது இரட்சண்யத்தை நாமடைவதற்கு மீட்பர் ஒருவர் பிறந்து வரவிருப்பதன் உண்மையையும் அறிவிக்கின்றது. எனினும், மற்றைய மூன்று ஞாயிறு நாளுக்கான வாசகங்களோடு ஒப்பிடும்போது இரண்டாம் ஞாயிறு நாளுக்கான வாசகம் சற்று மாறுபட்டதாக அமைந்துள்ளதாக எவரும் மறுப்பதற்கில்லை. இன்றைய நற்செய்தி குறிப்பிடும் திபேரியு சீசர், போஞ்சியு பிலாத்து, ஏரொது, பிலிப்பு, லிசானியா, அன்னா, கயபா, சக்கரியா, யோவான் என்று பல பெயர்களை நாம் இதற்கு முன்னர் சில தடவைகள் கேள்விப்பட்டிருப்போம். ஆயினும், இன்றைய நற்செய்தியை ஆழமாகத் தியானிக்கும் போது ஆண்டவர் இயேசுவே உண்மையான மெசியா எமது மீட்பரென எதிர்பார்க்கப்பட்டவரென நாம் இறையியல் கண்ணோட்டத்தில் மாத்திரம் அறிவதோடு நின்றுவிடாது, எமது விசுவாசம் நம்பிக்கையான வரலாற்று உண்மைகளோடு பிண்ணிப்பிணைந்துள்ளது என்ற தெளிவான விளக்கத்தினையும் வழங்குகின்றது என்பதனை நற்செய்தியாளர் லூக்கா எமக்கு அறிவிக்க முயலுகின்றார் என்பதனையும் தெளிவுபடுத்துகின்றது. இதனால் விண்ணுலகில் வாழ வேண்டிய ஆண்டவர் இயேசு இவ்வுலகில் எங்களுள் ஒருவராகப் பிறந்தது மட்டுமல்ல எமக்காகவே அவர் பிறந்துள்ளார் என்று நாம் விசுவசித்து ஏற்றுக்கொள்ள எம்மை அழைத்து நிற்கின்றது. எனவே, திருவருகைக்காலம் இயேசுவின் பிறப்பு விழாவினை மாத்திரம் எமக்கு நினைவுபடுத்தவில்லை. மாறாக, நாங்கள் விண்ணக வாழ்வைச் சுதந்தரித்துக் கொள்வதற்காகவே இவ்வுலகில் ஆண்டவர் இயேசுவின் சாயலாக மனிதர்களாகப் படைக்கப்பட்டுள்ளோம் என்ற உண்மையையும் வரலாற்று ஆதாரங்களோடு எமக்குப் படிப்பிக்கின்றது. ஆதலால் கிறிஸ்து பிறப்பு விழாவைக் கொண்டாட ஆயத்தம் செய்யும் நாம் எமக்கென ஆயத்தம் செய்யப்பட்டுள்ள விண்ணக வாழ்வின் உரிமைக் குடிமக்களாகும் பேற்றினைப்பெற்றிட எம்மை முற்றுமுழுதாக மாற்றி அமைக்குமாறு குழந்தை இயேசுவிடம் இரந்து வரம் வேண்டுவோம்.